ஜெயா கல்லூரியில்

# 436 மாணவர்களுக்கு பணி நியமன ஆணை

திருவள்ளூர், ஏப்.16: திருநின்றவூர் ஜெயா பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கும் விழா நடந்தது.

ஜெயா கல்வி குழும தலைவர் அ.கனகராஜ் தலைமை வகித்து, 436 மாணவ, மாணவிகளுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

கல்லூரி முதல்வர் விஜயகுமார் வரவேற்றார். ஜெயா கல்வி குழும செயலாளர் க.விஜயகுமாரி, துணை தலைவர் க.நவராஜ் முன்னிலை வகித்தனர். முன்னதாக, சிகரம் அசோசியேட்ஸ், சதர்ன் லேண்ட், குளோபல் சர்வீசஸ், ஜெரோ எஜுகேஷன், பர்னிசிங் கிளாஸ், விநாயகா இன்டோடெக், டிசிஎஸ் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளை தேர்வு செய்தனர்.

தேர்வு செய்யப்பட்ட மாணவர்களில் சிலருக்கு ரூ.50,000க்கு மேல் சம்பளம் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருநின்றவூர் ஜெயா பொறியியல் கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம் நேர்முக தேர்வில் தேர்வு செய்யப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு கல்லூரி தலைவர் பேராசிரியர் கனகராஜ் பணி நியமன ஆணையை வழங்கினார்.